2012 ஏப்ரல் 9]

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நியூமேட்டிக் கம்ப்ரஸர் இயந்திரம்மூலம் பட்டு கைத்தறி நெசவு நெய்பவர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறி நெசவாளர்களுக்கு 2 மாதங்களுக்கு 100 யூனிட் மின்சாரம் வழங்கப்படுகின்றது. இதற்காக அரசுக்கு வருடத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவாகின்றது. அதுமட்டுமல்ல; விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் மின்சாரம் 2 மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றது. இதற்காக தமிழக அரசு 50 கோடியே 74 இலட்சம் ரூபாயை செலவாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, மேற்கொண்டும் இலவசமாக மின்சாரம் வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

இலவச பயண அட்டை

***6792—திருமதி ஆர். ராஜலட்சுமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இலவச பயண அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது அங்கீகரிக்கப்பட்ட சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு 50 சதவீத கட்டணச் சலுகையில் பயண அட்டை வழங்கப்பட்டு வருவதால், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இலவச பயண அட்டை வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.*

திருமதி ஆர். ராஜலட்சுமி: *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மனுநீதிச் சோழன்கூட மணியோசை கேட்டால்தான் வந்து மக்கள் குறையைத் தீர்ப்பான். ஆனால், மக்களின் மனவோசைக்கிணங்க இன்று மெஜாரிட்டி அரசாங்கமாக அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கள் மனவோசையைக் கேட்ட மாத்திரத்திலேயே ஓடிவந்து உதவி செய்துகொண்டிருக்கின்றார். இன்றைய மாணவர்கள்தான் நாட்டின் நாளைய தலைவர்கள் என்பார்கள். அதுபோல, இன்றைய சட்டக் கல்லூரி மாணவர்களே சட்டப் பேரவையின் நாளைய உறுப்பினர்களாகவும் ஆகக்கூடும். எனக்காக இதனைச் செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

60—

ஓமியோபதி பிரிவு

***5518—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், காணாவிலக்கிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?